FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319495

1. District : Salem PS: V.B.A.C Year: 2025 FIR No.: 18/AC/2025 Date: 10.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 06.10.2025 at about 11.00 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 16.30 hrs and 19.10 hrs.

Time Period : Time from : Time to : 08.10.2025 at about 18.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 10.10.2025 Time : 09.10.2025 at about 08.20 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் at 06.45 hrs. நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் : Computer typed Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 15 Km West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : O/o. Inspectors of Police,
முறைக் காவல் எண் முகவரி Civil Supplies CID, Steel Plant, Salem.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : G. Sukthivel @ Balu (b) Father's/ Husband's Name : Ganesan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 41 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Farmer (g) Address : D.No. 7/32, Rasipuram Main Road, North Mallia Karai, Attur-Taluk, Salem District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Ramesajan, Inspector of Police, CS CID, Salem
2) Tr. Saravanakumar, S.I, CS CID, Salem
3) Tr. RamaKrishnan, S.I, CS CID, Salem, 4) Tmt. Rajeshwari, HC CS CID, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Saravanan 10.10.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10.10.2025 09.45 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Murugan
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
V&AC, Salem.

SSI V&AC. Salem

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 18/AC/2025 சட்டப்பிரிவு 7(a) of PC Act 1988 as amendment in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது:

10.10.2025ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 06.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திரு.சக்திவேல் த/பெ கணேசன், 7/32, ராசிபுரம் மெயின்ரோடு, வடக்கு மல்லியக்கரை, ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் சக்திவேல் த/பெ கணேசன் 7/32, ராசிபுரம் மெயின்ரோடு, வடக்கு மல்லியக்கரை, ஆத்தூர் வட்டம்,சேலம் மாவட்டம், பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சஒழிப்புத்துறை, சேலம், அய்யா, நான் மேலே சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். நான் பத்தாம் வகுப்புவரை படித்துள்ளேன். என்னை பாலு என்றும் கூப்பிடுவார்கள். எனக்கு சொந்தமாக மல்லியக்கரையில் சுமார் 2 ஏக்கர் விவசாயநிலம் உள்ளது. அதில் விவசாயம் செய்துவருகிறேன். எனது சொந்த தேவைக்காக அக்கம்பக்கம் மற்றும் எங்கள் ஊரில் தெரிந்தவர்களிடம் ரேசன் அரிசி வாங்கி பயன்படுத்திக் கொண்டிருந்தேன். அதனால், 01.09.2025ம் தேதியன்று இரவு நான் எனது மாருதிவேனில் 1150 கிலோ ரேசன் அரிசியினை வைத்து கடத்தியதாக சேலம் சிவில் சப்ளை சி.ஐ.டி. போலீசார் என்மீது கேஸ் போட்டு, என்னை ஜெயிலில் அடைத்துவிட்டார்கள். ஆனால் அவ்வாறு எனது மாருதி வேனில் அரிசி எதுவும் நான் எடுத்துவரவில்லை. அதோடு எனது மாருதிகாரையும் பறிமுதல் செய்து கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அதன்பின்னர், நான் பெயிலில் வெளியே வந்துவிட்டேன். கோர்ட் உத்தரவுப்படி, 03.10.2025ம் தேதிவரை சேலம் சிவில் சப்ளை சி.ஐ.டி. காவல் நிலையத்தில் தினமும் கன்டிசன் கையெழுத்து போட்டுவந்தேன். 02.10.2025 அன்று எனது மாருதிகாரை திரும்ப எடுப்பது தொடர்பாக எங்கள் ஏரியா போலீஸ் ராஜேஸ்வரி அவர்களுக்கு அவரது செல்போன் எண் 9952502467க்கு மதியம் 12.45 மணிக்கு போன்செய்து பேசினேன். அப்போது அவர், வண்டியெல்லாம் எடுத்துக்கலாம் நீ தொடர்ந்து தொழில் செய் அது சம்மந்தமாக 06.10.2025 திங்கள் கிழமை ஆபீசுக்கு சென்று இன்ஸ்பெக்டரை பார், அவர் மாமூல் கொடுப்பது தொடர்பாக விவரம் சொல்வார் என்று சொன்னார். அதன்படி 06.10.2025ம் தேதியன்று காலை சுமார் 11 மணிக்கு சேலம் சிவில் சப்ளை சி.ஐ.டி.

அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது அங்கு இருந்த SI சரவணக்குமார் அவர்களை பார்த்து இன்ஸ்பெக்டரை பார்க்கவந்த விபரத்தை சொன்னேன். அதற்கு அவர், 1500 ரூபாய் கொடுத்துவிட்டு காரில் அரிசி ஓட்டுவியா என்றும், தொடர்ந்து நீ தொழில் செய்து மாதாமாதம் மாமூல் கொடுக்கவேண்டும் என்றும், அது சம்மந்தமாக மாலை 4 மணிக்கு இன்ஸ்பெக்டரை வந்து பார்க்குமாறும் சொன்னார். நான் அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு சேலம் சிவில் சப்ளை சி.ஐ.டி. அலுவலகத்திற்கு சென்று காவல் ஆய்வாளர் திரு.ராமராஜன் அவர்களை சந்தித்தேன். அப்போது காவல் ஆய்வாளர் அவர்கள், என்னை தொடர்ந்து தொழில் செய்யுமாறு சொன்னார். அதற்கு நான் அங்கு பெரியவியாபாரிகள் அதிகம், அதனால் என்னால் செய்யமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர், நீ தொழில் செய் மத்தவங்களை நான் பார்த்துக்கொள்கிறேன் என்றும், மாதாமாதம் தனக்கு ரூ.10,000/-மும் SI சரவணகுமாருக்கு ரூ.5,000/-மும், SI ராமகிருஷ்ணனுக்கு ரூ.5,000/-மும், ஏரியா போலீஸ் ராஜேஸ்வரிக்கு ரூ.5000/-மும் மொத்தம் ரூ.25,000/-கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான், இந்த மாதம் என்னால் அவ்வாளவு தொகை தரமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர், அப்படியானால் இந்தமாதம் மட்டும் தனக்கு ரூ.5,000/-மும் இரண்டு SIக்கும் சேர்த்து ரூ.5,000/-மும் மற்றும் ஏரியா போலீசுக்கு ரூ.5,000/-மும் மொத்தம் ரூ.15,000/-த்தை கொடுக்குமாறும், அடுத்தமாதம் முதல் முழு தொகையையும் கொடுக்கவேண்டும் என்றும், சொல்லி என்னை அனுப்பிவிட்டார். நான் காவல் ஆய்வாளர் அறையில் இருந்து வெளியில் வந்தவுடன் அங்கிருந்த நாராயணன் அவர்கள் என்னிடம் SI ராமகிருஷ்ணன் அவர்கள் லெட்டர் கொடுக்க சொன்னார் என்றும் அதனால் காத்திருக்கும்படி சொன்னார். அதன் பின்னர் அங்குவந்த SI ராமகிருஷ்ணன் என்னை கூப்பிட்டு இன்ஸ்பெக்டர் சார் எல்லாவிவரமும் சொல்லிட்டாரா என்றும், உன்னை செய்யச்சொன்னாரா என்றும் கேட்டார். அதற்கு சொல்லிட்டார் சார் என்று சொன்னேன். SI ராமகிருஷ்ணன் தனக்கும் இன்ஸ்பெக்டருக்கும், SI சரவணகுமாருக்கும் மற்றும் ஏட்டு ராஜேஸ்வரிக்கும் கொடுக்கவேண்டிய லஞ்சபணத்தை எதிர்பார்த்துதான் அவ்வாறு சொல்லியுள்ளார். அதன் பின்னர் நாரயணன் இரண்டு கடிதங்களை என்னிடம் கொடுத்து ஏரியா போலீஸ் ராஜேஸ்வரி அவர்களிடம் கொடுக்கசொன்னார். நான் அந்த கடிதங்களை பெற்றுக்கொண்டு வெளியில் வந்துவிட்டேன். அந்த கடிதங்கள் TNCSC கிடங்கிற்கு வேறு வழக்கு சம்மந்தமாக கொடுக்கப்பட்டவை. பின்னர், ஏட்டு ராஜேஸ்வரி அவர்களுக்கு அவரது

செல்போனுக்கு அன்று மாலை சுமார் 7.10 மணிக்கு போன் செய்து SI ராமகிருஷ்ணன் அவர்கள் கடிதம் கொடுத்த விபரத்தை சொன்னேன். அதற்கு, சரி என்று சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் மற்றும் SI இருவரையும் பார்த்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான், இன்ஸ்பெக்டர் மற்றும் SI இருவரையும் பார்த்த விவரத்தையும் மாமூல் தரச்சொன்ன விவரத்தையும் சொன்னேன். அதற்கு அவர், சரி இந்தமாத மாமூலாக இன்ஸ்பெக்டர் சொன்ன ரூ.15000/- ஐ என்னிடம் கொடுத்துவிடு நான் பிரித்து கொடுத்து விடுவேன் என்றும், பணத்துடன் தன்னை வந்து பார்க்குமாறும், அப்போது அந்த கடிதத்தையும் அதோடு தனக்கு 300 கிலோ ரேசன் அரிசி தேவைப்படுவதாகவும், அதையும் ஏற்பாடு செய்து கொண்டுவந்து கொடுக்குமாறும் சொன்னார். பிறகு, 08.10.2025ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு ஏட்டு ராஜேஸ்வரி அவர்கள் எனக்கு போன் செய்து, தான் ஏற்கனவே சொன்னவாறு பணமும் ரேசன் அரிசியும் என்ன ஆச்சு என்று கேட்டார். நான் கூடியவிரைவில் ஏற்பாடு செய்து கொண்டு வருவதாக சொன்னேன். அதற்கு அவர், பணத்தையும் ரேசன் அரிசியையும் ஏற்பாடு செய்துகொண்டு வெள்ளிக்கிழமை சேலம் வந்து தன்னை பார்க்குமாறு சொன்னார். மீண்டும் 09.10.2025ம் தேதி காலை சுமார் 8.20 மணிக்கு ஏட்டு ராஜேஸ்வரி எனக்கு போன் செய்து, தான் இன்று தம்மம்பட்டி ஏரியாவுக்கு வருவதாகவும், பணத்தையும் ரேசன் அரிசி 600 கிலோவாக ரெடிபண்ணிவைக்குமாறும் சொன்னார், அதற்கு நான் எனது அம்மாவை ஆஸ்பிட்டலுக்கு கூட்டிக்கொண்டு வந்துவிட்டதாக சொன்னபோது, அப்படியானால் நாளை கலெக்டர் ஆபீசுக்கு விசாரணைக்கு வரும்போது சேலம் கொண்டலாம்பட்டி வந்து தனக்கு போன் செய்யுமாறும், தான் சொல்லுமிடத்தில் வந்து பணத்தை கொடுத்துவிடுமாறும் சொன்னார். 06.10.2025 அன்று காலை நான் SI சரவணக்குமார் அவர்களை பார்த்தபோது அவர் மாமூல் கேட்டது பற்றி பேசியதையும், அன்று மாலை காவல் ஆய்வாளரை சந்தித்தபோது அவர் பேசியதையும் மற்றும் SI ராமகிருஷ்ணன் அவர்கள் பேசியதையும் ரெக்கார்டிங் கருவியில் பதிவு செய்துவைத்திருக்கிறேன். சிவில் சப்ளை சி.ஐ.டி போலீசாருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து தொழிலில் ஈடுபட எனக்கு விருப்பம் இல்லை. அவர்கள் சொன்னவாறு ரூபாய் 15,000/- பணத்துடன் சென்று, ஏட்டு ராஜேஸ்வரி அவர்களை இன்று சந்திக்க உள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட சிவில் சப்ளை சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் ராமராஜன், SIக்கள் ராமகிருஷ்ணன் மற்றும் சரவணக்குமார், ஏட்டு ராஜேஸ்வரி ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை

எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு,sd/-xxxxxxxx (G.Sakthivel) 10.10.25. Sir, Received the computer typed complaint on 10.10.2025 at 06.45hrs, and a Voice Recording device, which was produced by the informant, down load the voice files from the device to the office Computer, heard them carefully and it clearly makes out primafacie offence against Tr.Ramarajan, Inspector of Police, Tr.Saravanakumar, SI of Police, Tr.Ramakrishnan, SI of Police and Tmt.Rajeshwari, HC of Salem Civil supply CID and hence, I registered a case in Salem V & AC Cr.No. 18/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 10.10.2025 at 09.30 hrs, after making a confidential verification on the general reputation of the above accused which is learnt to be not good. Oral concurrence of the Superintendent of Police, West Range was also obtained. Then the above voice files were copied from the computer into a DVD. The Voice Recording Device is returned to the informant as requested by him. Sd.xxxxxx(S.Murugan), 10.10.2025, Inspr. of Police, V & AC, Salem.

The original complaint and original FIR along with the above DVD along certificate under section 63(4) of BSA 2023, was sent to the Hon'ble court of Principal District and Sessions Judge, Salem and the remaining copies were sent to the officers concerned.

10/10/2025
Inspr. of Police,
V&AC, Salem.